செ.வெ.எண்:43 /மே நாள்: 24.05.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**பேரிடர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தென் மேற்கு பருவமழையையொட்டி மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைககள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்பு ஆலோசனைக் குழுக் கூட்டம்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (24.05.2016) சமுதாய அடிப்படையிலான பேரிடர் அபாய மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தென் மேற்கு பருவமழையால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அரசு அலுவலர்களுடனான ஒருங்கிணைப்பு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

தமிழகத்தில் உள்ள பிற கடலோர மாவட்டங்களை விட இராமநாதபுரம் மாவட்டமானது நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 22% (சுமார் 1,71,722) பேர் கடல் மற்றும் கடல் சார்ந்த தொழிலை நம்பியுள்ளனர். நமது மாவட்டத்தில் சுமார் 180 கிராமங்கள் கடலையொட்டி இருப்பதனால் அடிக்கடி பேரிடர்கள் இக்கிராமங்களில் ஏற்படுகின்றன. இதனால் அப்பகுதி மக்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர். இதன் காரணமாக பல்வகை பேரிடர்களின் அபாயத்தைக் குறைக்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு உலக வங்கி நிதியுதவியுடன் "சமுதாய அடிப்படையிலான பேரிடர் அபாய மேலாண்மைத் திட்டம்" எனும் திட்டத்தை இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தி வருகின்றது. சுனாமி, புயல் மற்றும் வெள்ளம் உள்ளிட்ட பேரிடர் பாதிப்புகளினால் உள்ளூர் மக்களுக்கு எந்தவித உயிர் சேதமோ, கால்நடை பாதிப்போ அல்லது பொருட்சேதமோ ஏற்படா வண்ணம் தடுப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

ஒவ்வொரு கிராமத்திலும் தன்னார்வலர்களைக் கொண்டு இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பேரிடர் அபாய மேலாண்மைத் திட்ட தன்னார்வலர்கள் உள்ளூர் மக்கள் ஒத்துழைப்போடு ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித்தனி திட்டம் தயாரிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் பேரிடர் முன்னேற்பாடு பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும். இந்த உயிர் காக்கும் அரிய பணியில் உங்கள் அனைவரையும் ஈடுபடுத்தி கொண்டு சமூக ஒற்றுமையுடன் சாதி, மதம், இனம், ஏழை, வசதி படைத்தோர் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரும் ஒன்றிணைந்து பேரிடரை திறமையாக மேலாண்மை செய்வோம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

முன்னதாக சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016 சிறப்பான முறையில் நடத்திட ஒத்துழைப்பு நல்கிய அனைத்து செய்தி நிறுவனங்களின் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களின் செய்தியாளர்கள் , ஒளிப்பதிவாளர்களுக்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், பரமக்குடி சார் ஆட்சியர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மன்னார் வளைகுடா காப்பாளர் திரு.தீபக் பில்ஜி , இராமநாதபுரம் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன் உள்பட அரசு அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**